

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளரும், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை தலைவருமான கே.ஜி.மாரிக்கண்ணன் புதல்வர் எம்.மணிவரதன் சி.சிநேகா திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கைக்கான பயிற்சி முகாம் கரூர், அரவக்குறிச்சி, குளித்தலை, கிருஷ்ணராயபுரத்தில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

## நீலகிரி போல் ஏலகிரி மாற்றப்பட வேண்டும்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தாயுள்ளத்துடன் மலைவாழ் மக்களுக்கு உதவுகிறார்!

## அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!



திருப்பத்தூர், ஜூலை 1 -

நீலகிரி மலையைப் போல் ஏலகிரி மலையும் ஒரு கோடை வாசஸ்தலமாக மாற்றப்பட வேண்டும் என்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாயுள்ளத்தோடு தாயுமானவராக மலைவாழ் மக்களுக்கு பல்வேறு வகையில் உதவி வருகிறார் என்று ஏலகிரி மலையில் கோடை விழாவை தொடங்கி வைத்துப் பேசுகையில் அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத் துறை இணைந்து நடத்துகின்ற ஏலகிரி மலை கோடை விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த விழாவில் ஒரு கோடியே 33 லட்சம் திட்ட மதிப்பீட்டில் 37 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற ஒரு விழாவும் இங்கு நடைபெற இருக்கிறது.

கோடை விழா நடைபெறுகின்ற ஏலகிரி என்று சொன்னாலே ஏழைகளின் நீலகிரி என்று சொல்லலாம். தமிழ்நாட்டில் உச்சமாக இருக்கிற நீலகிரி பல மாநிலத்தில் இருக்கிறவர்கள் பல வெளிநாட்டுக்காரர்கள் வந்து செல்கின்ற ஒரு சுற்றுலா தலமாக இருக்கின்றது. ஆனால் ஏழை எளிய மக்கள் வந்து செல்கின்ற ஒரு சுற்றுலா தலமாக ஏலகிரி மலை இருக்கின்றது.

ஏலகிரி மலையில் கோடை விழா என்பது முதல் முதலாக பிரிட்டிஷ் காலத்தில் தான் துவங்கப்பட்டது. இந்த பகுதியில் நடு கற்கள் காணப்பட்டதற்கு உங்கள் உரையில் தெரிவித்தீர்கள். இந்த ஏலகிரி மலை மற்றும் சுற்றி இருக்கின்ற பகுதியில் தற்போதும் கற்காலக் கோடரிகள் கிடைக்கின்றது. கிபி பத்தாம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டு ஏலகிரி மலையில் கண்டெடுக்கப் பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

### ஐநூற்றுவர் எனும் வணிகர் குழு!

ஐநூற்றுவர் என்ற வணிகர் குழுவை சேர்ந்த வணிகர்கள் இந்த பகுதியில் வர்த்தகம் செய்ததாக கூட குறிப்புகள் இருக்கிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் தனது இலக்கியங்களில் ஏலகிரி மலை பகுதி பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்.

ஏலகிரி மலை தற்போது 14 மலை கிராமங்களை கொண்ட ஒரு பகுதியாக இருக்கிறது. ஏறத்தாழ நாலாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்வதாக இந்த ஏலகிரி மலை இருக்கின்றது. இயற்கை பூங்கா, முருகர் கோயில், படகு இல்லம் மலையேற்றம் போன்ற பல சுற்றுலா அம்சங்கள் இங்கு இருக்கின்றது. ஆனாலும் அது போதாது, இந்த ஏலகிரி மலை ஆந்திரா, கர்நாடகா ஒட்டி இருக்கின்ற ஒரு பகுதி, அதனால் அருகில் உள்ள மாநிலத்தவர்களும் இந்த ஏலகிரிமலையை பயன்படுத்தப்படுகிறார்கள். அப்படிப்பட்ட இந்த ஏலகிரி மலை பல நிலைகளில் புறக்கணி க்கப்பட்டிருந்தது.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் 13 நபர்களுக்கு கலைஞர் கனவு இல்லம் கொடுக்கப் பட்டிருக்கிறது. 15வது நிதி குழு மானியத்தில் மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி, கிராம ஊராட்சிகளின் மூலமாக 1 கோடியே 92 லட்சம் மதிப்பீட்டில் 56 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாடு பணிகள் நடைபெற்று இருக்கிறது. ரூபாய் 42 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கிறது. மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி, கிராம ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூ.1 கோடியே 18 லட்சம் மதிப்பீட்டில் 28 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ரூபாய் 14 லட்சம் மதிப்பீட்டில் 8 கிராமப்புற வீடுகள் பழுதுபார்க்கப்பட்டு இருக்கின்றது. ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் 3 பழங்குடியினர் வீடுகள் இது போன்ற சுமார் 12 கோடியே 13 லட்சம் மதிப்பீட்டில் 291 பணிகள் இந்த ஏலகிரிமலையில் நடைபெற்றிருக்கிறது.

அதேபோன்று ரூ.1 கோடி மதிப்பீட்டில் அத்தனாவூர் நிலாவூர் சாலை ஒரு கிலோமீட்டர் நீளத்திற்கு அகலப்படுத்தப்பட்டு இருக்கிறது. ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மழை நீர் வடிந்து ஓடும் சிறு பாலம் கட்டுவது வடிக்கால் அமைப்பது போன்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் அத்தனாவூர் மற்றும் மங்கலம் சாலைகளில் விபத்துகளை தடுப்பதற்காக பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் கொண்டை வளைவுகளில் விபத்துக்களை தடுப்பதற்காக உருளை வடிவிலான உலோக தடுப்பான் அமைக்கப்பட்டுள்ளது. உலோக தடுப்பான் என்பது நான் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையோடு முதன் முதலாக இந்தத் திட்டத்தை கொண்டு வந்தேன்.

### உலோகத் தடுப்பான்

இந்த உலோக தடுப்பான் என்பது அமெரிக்காவில் தான் இருக்கிறது. ஆனால் அமெரிக்காவிற்கு நிகராக தமிழ்நாட்டிலும் இந்த உலோக தடுப்பான் இந்த மலையில் நாங்கள் பயன்படுத்திருக்கின்றோம். அதோடு மட்டுமல்லாது பாதுகாப்பான பயணத்திற்கு எச்சரிக்கை பலகைகள் ஒளிரும் பட்டைகள் சாலைகளில் அமைத்திருக்கின்றோம்.

மேலும் ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பல முறை கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் நெடுஞ்சாலைத்துறை நிதி நிலை அறிக்கை அளிப்பதற்கு போவதற்கு முன்பாக முதலமைச்சர் அவர்களிடம் கடைசியாக வாங்கிய அனுமதி நீண்ட நாட்களாக ஊராட்சி சாலையாக, ஊராட்சியின் உடைய ஒன்றிய சாலையாக, ஏலகிரி இணைக்கின்ற வட்டச் சாலை அமைப்பதற்கு 10 கிலோ மீட்டர் சாலை முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அறிவிக்க வேண்டும் என்று அடிப்படையில் தான் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் 4 ஊராட்சி சாலைகளை இணைக்கின்ற 10 கிலோமீட்டர் சாலையை அறிவித்திருக்கின்றேன்.

பத்து கிலோ மீட்டர் சாலை 14 கிராமங்களை இணைக்கின்ற சாலை, இங்கு வருவதற்கு முக்கிய காரணமாக ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இருந்திருக்கின்றார் என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே இந்த நிதியாண்டிலேயே அந்த பணிகள் செய்து முடிப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஆட்சியில் ரூபாய் 22 கோடி மதிப்பீட்டில் 15 கிலோமீட்டர் சாலைகள் ஏலகிரி மலை அகலப்படுத்துகின்ற உறுதிப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏலகிரி மலை பகுதியில் வசிக்கின்ற மக்களுக்கு சாதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

நான்காண்டு காலத்தில் முதலமைச்சர் அவர்கள் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை பார்த்து பார்த்து செய்திருக்கிறார்கள். இந்த மலைவாழ் மக்களுக்கு ஹீமோகுளோபின் அளவு குறைவாக உள்ளது அதனை கண்ட முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கு மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பில் மரபணு அட்டை கொடுத்து வீட்டுக்கு வீடு மாத்திரைகள் கொடுப்பதினால் ஹீமோகுளோபின் அதிகமாகிவிடும் என்று அந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

ஏலகிரி மலையில் இருக்கின்ற மக்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, ஏலகிரி மலை மக்களுக்கும் தாயாக தாயுள்ளம் கொண்ட தாயுமானவராக தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்றார். கோரிக்கை வைத்த ஊராட்சி மன்ற தலைவர் அவர்களையும் சேர்த்து சொல்கின்றேன்.

இந்த ஏலகிரி மலைக்கு பல திட்டங்களை கொண்டு வந்திருக்கின்றோம், கொண்டு வருவோம் கொண்டு வருவதற்கு காரணமாக இருந்த முதலமை ச்சர் அவர்களுக்கு உற்ற துணையாக இருந்து என்றைக்கும் அவரோடு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி ஓரணியில் தமிழ்நாடு என்ற திட்டம் செயல்படுத்தப்படுவதை முன்னிட்டு ஈரோடு மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை செய்தியை வீடு, வீடாக திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்து கூறி உறுப்பினர்கள் சேர்க்கும் விதமாக கழக பாக முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டம் பெருந்துறை வாவிக்கடையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் கே.பி.சாமி, பால் சின்னசாமி, பெரியசாமி, கனகராஜ், ஈஸ்வரமூர்த்தி, சுப்பிரமணியன், ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப் பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் மின்னாம்பள்ளி வைஷ்ணவி திருமண மண்டபத்தில் டிஜிட்டல் முறையில் புதிய உறுப்பினர் சேர்க்கை குறித்து காணொளி காட்சி மூலம் பயிற்சி பாசறை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட அவை தலைவர் மு.ரா.கருணாநிதி முன்னிலை வகித்தார். தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ.விஜயகுமார் தலைமை தாங்கினார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்த்குமார் கலந்து கொண்டு உரையாற்றினார். இதில் சார்பு அணி நிர்வாகிகள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கரூர் மாவட்டத்தில்

# தொகுதிகள் தோறும் புதிய கழக உறுப்பினர் சேர்க்கை பயிற்சி முகாம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரை!

கரூர், ஜூலை 1 -

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கைக்கான பயிற்சி முகாம் கரூர், அரவக்குறிச்சி, குளித்தலை, கிருஷ்ணராயபுரத்தில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

கரூர் மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு புதிய கழக உறுப்பினர் சேர்க்கைக்கான பிஎல்ஏ 2, பிடிஏ வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், பூத் இளைஞர் அணியினருக்கான பயிற்சி முகாம் கரூர் சட்டமன்ற தொகுதிக்கு கரூர் பிரேம் மஹாலிலும், அரவக்குறிச்சி தொகுதிக்கு நொய்யல், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு மணவாடி, குளித்தலை தொகுதிக்கு அய்யர்மலை ஆகிய இடங்களில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. கூட்டத்தில் பேசியதாவது.

கழகத்தினுடைய தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்கிற மகத்தான உறுப்பினர் சேர்க்கையை அறிவித்துள்ளார்கள். இது ஏதோ உறுப்பினர் சேர்க்கை மட்டுமல்லாது நாம் சிந்தித்து செயல்பட வேண்டிய முக்கியமான தருணம். மண், மொழி, மானம் காக்க ஓர் அணியில் தமிழ்நாடு என்ற மகத்தான நிகழ்வை தலைவர் அவர்கள் 1ம் தேதி தொடங்கி வைக்க இருக்கிறார்கள். அதன் பின்னர் கரூர் மாவட்டத்தில் 1055 வாக்கு சாவடிகளிலும், முழுமையாக வீடு வாரியாக சென்று அனைத்து வாக்காளர்களையும் நேரடியாக சந்தித்து அவர்களை இயக்கத்தில் உறுப்பினராக சேர்க்க முழு முயற்சி எடுக்க வேண்டும். இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள பி.எல்.ஏ.2, பூத் நிர்வாகிகள் பிஎல்சி, இளைஞர் அணி, தகவல் தொழில் நுட்ப அணியினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் சேர்க்கை என்பது வரக்கூடிய 45 நாட்கள் முழுமையாக தலைவர் அவர்கள் கட்ட கக்கிளைப்படி சிறப்பாக செய்திட வேண்டும்.

பகுதி ஒன்றிய பூத் கமிட்டி நிர்வாகிகள் என ஒரு நாளைக்கு 15 வீடுகளுக்கு சென்று பணியைத் தொடங்கி சராசரியாக ஒரு குடும்பத்திற்கு 10 நிமிடம் செலவிட்டு உறுப்பினர் சேர்க்க வேண்டும். ஒரு நாளைக்கு காலை 6.30 மணிக்கு தொடங்கினால் 9 மணிக்கு நிறைவு செய்யலாம். மாலை 6 மணிக்கு தொடங்கினால் 8:30 மணிக்கு நிறைவு செய்யலாம். ஒரு நாளைக்கு 15 குடும்பங்களை நேரில் சந்தித்து உறுப்பினராக சேர்க்க முடியும். சராசரியாக ஒரு பூத்துக்கு 300 குடும்பங்கள் என அதிகபட்சமாக இருந்தால் கூட 20 நாட்களில் முழுமையாக இப் பணியை செய்ய முடியும். எனவே நம்முடைய தலைவர் நமக்கு வழங்கக் கூடிய வாய்ப்பு 45 நாட்கள். ஆனால் இந்த முயற்சியின் காரணமாக 20 நாட்களில் செய்திட முடியும் அந்த நம்பிக்கையோடு விரைவாக செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். காலையா மாலையா என்பதை நீங்கள் தேர்வு செய்து கொள்ளலாம். எந்தவித பாகுபாடும் பார்க்காமல் அனைவரையும் சந்தித்து முதலமைச்சர் வழங்கி உள்ள சாதனை திட்டங்களை துண்டு பிரசுரமாக வழங்கி இப்பணிகளை தொடங்கிட வேண்டும். மக்கள் சொல்லுகின்ற கருத்துக்களையும் கேட்டு படிவத்தில் உள்ளபடி வினாக்களை கேட்டு பூர்த்தி செய்ய வேண்டும். ஒரு பூத்துக்கு 30 விழுக்காடு உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும் என்பது தலைவர் இட்ட கட்டளை. இருப்பினும் நாம் முயற்சி செய்தால் 40 விழுக்காடு அளவுக்கு சேர்க்க முடியும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 நிமிடம் செலவிட வேண்டும். மற்ற மாவட்டங்களை விட கரூர் மாவட்டம் அதிக உறுப்பினர்களை சேர்த்து முன்னணி வகிக்கிறது என்கிற நிலையை ஏற்படுத்த அனைவரும் செயல்பட வேண்டும்.

இரண்டாம் தேதி மாலை கரூரில் ஒரு பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற இருக்கிறது. அதில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பு சேர்க்க வேண்டும் உறுப்பினர் சேர்ப்பு பணிக்காக ஏற்கனவே நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர் அவர்களோடு ஐ.டி விங், இளைஞரணி மகளிர் அணி, நிர்வாகிகள் சேர்ந்து அந்தந்த பூத்துக்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் அவரவர் வாக்குச்சாவடிகளில் பூத் கமிட்டியோடு சேர்ந்து செல்ல வேண்டும்.. பத்து பேர் 15 பேர் செல்லும்போது மக்களும் பெரும் ஆதரவை அளிப்பார்கள். ஒவ்வொரு பூத்துக்கும் ஒருங்கிணைப்பாளர்நியமிக்கப்பட்டுள்ளனர் . கூட்டு கமிட்டியுடன் சேர்ந்து அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். பொதுமக்கள் செல்லக்கூடிய கருத்துக்களை, குறை நிறைகளை குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். அரசின் திட்டத்தில் பயன் பெறுபவர்கள் இருந்தால் அதையும் குறித்துக் கொள்ள வேண்டும். குறைகள் இருந்தால் அவர்களது செல் நம்பரை வாங்கி பணி முடிந்தவுடன் அவர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும். ஒரு பூத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள 6 பேருடன் அப்பகுதி நிர்வாகிகளும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை கழகத் தலைவர் அவர்கள் வழங்கி உள்ளார்கள் கரூர் மாநகராட்சிக்கு வரலாற்றில் இல்லாத அளவுக்கு அதிகமான நிதிகளை வழங்கி உள்ளார்கள் தொடர்ச்சியாக அரசின் திட்டங்களை எடுத்துக் கூற வேண்டும்.

மகளிர் உரிமைத் தொகை சிறப்பு முகாம்கள் நடத்தி விடுபட்டவர்களது மனு பரிசீலிக்கப்பட உள்ளது. தகுதி வாய்ந்த அனைவருக்கும் இத்தொகை கிடைக்க செய்ய வேண்டும். மத்திய அரசு மாநிலத்திற்கு நிதியை வழங்குவதில்லை. இந்தியை திணிக்க முயற்சி செய்கிறது. இவற்றையெல்லாம் கடந்து இந்தியாவின் முதன்மை மாநிலமாக முதலமைச்சர் செயல் படுவதை மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். கோவை போன்ற மேற்கு மாவட்டங்களுக்கு முதலமைச்சர் வருகை தந்த போது மக்கள் அமோகமான வரவேற்பை அளித்து பொதுமக்கள் நாங்கள் நன்றாக இருக்கிறோம் நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா? உங்கள் உடல்நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள். அடுத்த முறையும் நீங்கள் தான் முதலமைச்சர் என்கிற உறுதியை வழங்குகிறார்கள். ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் வாக்காளர்கள் தொடங்கி அனைவரும் அரசுக்கு ஆதரவு அளித்து கொண்டிருக்கிறார்கள். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று திட்டங்களை ஆய்வு செய்து மக்களிடையே கொண்டு சேர்க்கின்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அரசின் திட்டங்களை கொண்டு செல்வது இயக்கத்தை வலுப்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொண்டு 234 தொகுதிகளிலும் கரூர் மாவட்டம் 4 தொகுதிகளிலும் அமோக வெற்றி பெற்றது என்கின்ற நிலையை அனைவரும் இணைந்து உருவாக்க வேண்டும். பூத் நிர்வாகிகள் யார் வரவில்லை? படிப்பவர்களா?. வெளியூரில் இருப்பவரா என்பதையெல்லாம் கண்டறிந்து அவ்வாறானோரை மாற்றி விட்டு சரியான நபர்களை நியமனம் செய்ய வேண்டும்.

அரசின் திட்டங்களையும், கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் ஒரு 3000 கோடி அளவிலான திட்டங்களையும் பகுதிவாரியாக வீடு வீடாக ஒவ்வொரு வாக்காளரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும்.

இவ்வாறு வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேசினார்.

கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே. மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக நிர்வாகிகள் டி.ராஜேந்திரன், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பி.வி. பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே. டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ. ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என். ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு கழக செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர். எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், என். மணிகண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி. வளர்மதி, வி.கே.வேலுச்சாமி, ப.முத்துக்குமார், எம்.ரகுநாதன், கே.பாஸ்கரன், கே.ரவிராஜா, எம். ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், சி.கதிரவன், எல்.கரிகாலன், அ.சந்திரன், ப.தியாகராஜன், இ. ராமர் (முன்னாள் எம்எல்ஏ), ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் செயலாளர்கள் க.முரளிராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ், எம்.சசிக்குமார், ஆர். மோகன்ராஜ், இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் கழக செயலாளர் எம். முத்து (எ) சுப்பிரமணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சக்திவேல், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சுதாகர், கழக அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் வழிகாட்டுதல்படி மண், மொழி, மானம் காத்திட "ஓரணியில் தமிழ்நாடு" கீழ் கழகத்தில் புதிய உறுப்பினர்களை இணைக்கும் பொருட்டு, சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிச்சிப்பாளையம் பகுதி அமைக்கப்பட்டுள்ள பணிக்குழு – 9, கோட்டம் 41, 42 சேர்ந்த நிர்வாகிகள், பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பார் இளங்கோவன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாநகர துணை செயலாளர் வழக்கறிஞர் கணேசன், பணிக்குழு உறுப்பினர்கள் அன்வர், ஜெகன், பகுதி செயலாளர் ஜெய், கோட்ட செயலாளர் சத்தியன், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.